S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 322 | 15.05.2026 | FRIDAY | VAIKASI : 1 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 322 | 15.05.2026 | வெள்ளிக்கிழமை | வைகாசி : 1 | விலை : ரூ.5/–

## தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு

# "அகவிலைப்படி 2% உயர்வு!"


## முதல்வர் விஜய் உத்தரவு

சென்னை: மே.15-

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி, மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகராக 01.01.2026 முதல் கணக்கிடப்பட்டு 60 சதவீதமாக உயர்த்தி வழங்க முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பு: முதல்வர் விஜய் தலைமையிலான அரசு, மக்கள் நலனை முன்னிறுத்தி மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உறுதிமொழி அளித்துள்ளது. இந்தத் திட்டங்களை வடிவமைப்பதிலும், அவற்றை முழுவீச்சில் நடைமுறைப்படுத்துவதிலும்





அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகித்து வருகின்றனர்.

அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு 01.01.2026 முதல் 58 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களும் அதனால் பயன்பெறும் வகையில், , 01.01.2026 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்க முதல்வர் பரிசீலித்து உத்தரவிட்டுள்ளார்.

இதனால் 58% ஆக உள்ள அகவிலைப்படி 2 சதவீதம் உயர்ந்து 01.01.2026 முதல் 60 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 1,230 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும் என்று அரசு செய்திக் குறிப்பில் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "எங்களால் அதிமுக அலுவலகத்துக்கு எந்த பாதிப்பும் வராது" : சி.வி.சண்முகம்

சென்னை: மே.15-

"அதிமுக அலுவலகம் மீது ஒரு தூசிகூட படாது. எங்களால் அதற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது," என அதிமுக எம்எல்ஏ சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.



அதிமுகவில் உட்கட்சிப் பூசல் நிலவி வரும் நிலையில், அரசியல் களம் பரபரப்புடன் காணப்படுகிறது. இந்நிலையில், சி.வி.சண்முகம் இன்று செய்தியாளர்களிடம் பேசும்போது, "இந்த ரத்தம் அதிமுகவின் ரத்தம். எங்களுக்கு பல பதவிகளைக் கொடுத்து அழகு பார்த்த இயக்கம் அதிமுக.

சட்டப்படி அதிமுகவின் உண்மையான தொண்டன் என்பதை நிரூபித்ததன் பின்னரே என் கால் அதிமுக அலுவலகத்தில் பதியும். அதிமுக அலுவலகம் எங்கள் கோயில். அதிமுக அலுவலகம் மீது ஒரு தூசிகூட படவோ, பாதிப்பு ஏற்படவோ அனுமதிக்க மாட்டோம். யாரும் அச்சப்பட வேண்டாம்" எனப் பேசினார்.

இதனிடையே, அதிமுக பிளவுபட்டுள்ள நிலையில், தங்கள் தரப்பு கொறடாவை அங்கீகாரம் செய்ய வேண்டும் என சட்டப்பேரவைத் தலைவரை இபிஎஸ் தரப்பு மற்றும் சி.வி.சண்முகம் தரப்பு தனித்தனியாக நேரில் சென்று மனு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக விஜய் நாராயண் பொறுப்பேற்பு

சென்னை, மே.15-

தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண் இன்று காலை பொறுப்பேற்றுக் கொண்டார்.





கடந்த மாதம் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் தவெக அதிக இடங்களில் வென்று ஆட்சி அமைத்த நிலையில், திமுக ஆட்சியில் அரசின் தலைமை வழக்கறிஞராக பதவி வகித்த பி.எஸ். ராமன் தனது பதவியை ராஜினாமா செய்ததால், அந்தப் பதவி காலியானது.

இந்த நிலையில் மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயணை தலைமை வழக்கறிஞராக நியமித்து, தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, இன்று காலை அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்கறிஞராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

யார் இந்த விஜய் நாராயண் ?: பள்ளி கல்வியை அப்போதைய பிஹார் மாநிலத்தில் இருந்த ராஞ்சியில் முடித்த விஜய் நாராயண், தனது பட்டப்படிப்பை சென்னை லயோலா கல்லூரியிலும், சட்டப்படிப்பை சென்னை அரசு சட்டக் கல்லூரியில் முடித்தார்.

அரசியலமைப்பு சட்டத்தை மேம்படுத்த பணியாற்றிய குழுவில் இடம்பெற்ற பிரபல வழக்கறிஞர் எம்.கே.நம்பியார் இவரது தாத்தா ஆவார். மத்திய அரசின் தற்போதைய அட்டர்னி ஜெனரலான கே.கே.வேணுகோபால் இவரது உறவினர். வரலாற்று ஆய்வாளரும், பத்திரிக்கையாளருமான சர்தார் கே.எம்.பணிக்கர் இவரது தாய்வழி தாத்தா.

தொழிலாளர், அரசியலமைப்பு, நிர்வாகம், வணிகம் உள்ளிட்ட பல்வேறு வகையான சட்டம் குறித்த வழக்குகளில் ஆஜரான இவருக்கு, 2004ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் அந்தஸ்து வழங்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்திலும், பிற பல்வேறு உயர் நீதிமன்றங்களிலும் ஆஜரானவர் விஜய் நாராயண்.

இவர், இந்திய சட்ட நிறுவனத்தின் சென்னை மண்டல செயற்குழு உறுப்பினராக இந்திய தலைமை நீதிபதியால் 2012ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். திருச்சியில் உள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியின் பொதுக் குழு உறுப்பினராக கடந்த பிப்ரவரி மாதம் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியால் நியமிக்கப்பட்டார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் தொன்மையான வழக்கறிஞர் சங்கமான மெட்ராஸ் பார் அசோசியேசனின் தலைவராக இருந்தவர். முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக ஆட்சிக் காலத்தில் 2017 முதல் 2021ம் ஆண்டு வரை தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## சேலத்தில் தொடங்கப்பட்டது முதல்வர் விஜய் அறிவித்த 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' திட்டம்

சேலம்: மே.15-

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தமிழக முதல்வர் விஜய் அறிவித்த 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' திட்டம் (Singappen Special Force SSF) சேலம் மாநகராட்சியில் நேற்று முதல் தனது பணியைத் தொடங்கியது. முதற்கட்டமாக, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் பெண் காவலர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.




தமிழக முதல்வராக பதவி ஏற்றதும், முதல்வர் விஜய் பெண்கள் பாதுகாப்புக்கு என தமிழகத்தில் 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' தொடங்கப்படும் என்று அறிவித்தார். இந்நிலையில் தமிழகத்தில் முதல்முறையாக சேலம் மாநகர காவல் துறையில் 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில், சேலம் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி மேற்பார்வையில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை" அமைக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சூரமங்கலம் சரக உதவி ஆணையர் ரமளி ராமலட்சுமி கண்காணிப்பில், எஸ் ஐ., அருள்மொழி. எஸ் எஸ் ஐ., க்கள் அம்சவள்ளி, சத்தியவதி, பெண் தலைமை காவலர்கள் பிரேமலதா, மங்கையர்க்கரசி ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதிரடிப்படை வாகனத்தின் ஓட்டுநர் மட்டும் ஆண் காவலர் ஆவார்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் (SSF) செயல்பாடுகள்:

குற்றச்சம்பவங்கள் நடைபெற வாய்ப்புள்ள இடங்களை கண்டறிந்து கண்காணித்தல், .பொது இடங்களில் தொடர்ந்து ரோந்து மேற்கொண்டு, பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குதல், பேருந்து நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள். கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்ற மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்வது.

சட்டவிரோத மற்றும் பெண்களுக்கு எதிரான செயல்களை தடுக்க விரைந்து நடவடிக்கை எடுப்பது, பெறப்படும் புகார்களுக்கு உடனடி மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்வது.

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் நபர்களை மீட்டு அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வது, தேவையான உதவிகள் மற்றும் ஆதரவுகள் உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்வது, சமூக நலத்துறை கல்வித்துறை மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவது.

சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் இணைத்து பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபடுவது, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தடுப்பு மற்றும் பாதுகாப்பு உத்திகளை முதன்மை இலக்காகக் கொண்டு செயல்படுவது, சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் நோக்கங்கள் ஆகும். சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை முதற்கட்டமாக காவல்துறை தலைமையக நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும்.

இச்சிறப்பு படையினருக்கு தேவையான நான்கு சக்கர வாகனம் சாதனங்கள், Body Worn Camera மற்றும் இதர வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் பணியை தொடங்கி வைத்த சேலம் மாநகர காவல் ஆணையர் அணில் குமார் கிரி அதிரடிப்படையினருக்கு ஆலோசனைகளை வழங்கினார்

பின்னர் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி செய்தியாளர்களிடம் பேசுகையில், "பெண்கள் பிரச்சினை தொடர்பாக புகார் செய்தால் அல்லது அவசர அழைப்பிற்கு தொடர்பு கொண்டால் உடனே சிங்கப்பெண் அதிரடி படை அங்கு சென்று தேவையான உதவிகள் மற்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் கூறினார்.

## டெல்லியில் நிர்பயா பாணியில் நடந்த மற்றொரு கொடூரம்

புதுடெல்லி, மே.15-

தலைநகர் டெல்லியில், படுக்கை வசதி கொண்ட தனியார் சொகுசுப் பேருந்தில் (Sleeper Bus) பயணம் செய்த இளம்பெண் ஒருவர், அந்தப் பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



கடந்த 12ம்தேதி இரவு பேருந்தில் வந்த பெண்ணை, பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் மிரட்டி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இது குறித்து பாதிக்கப்பட்ட பெண் அளித்த புகாரின் பேரில், டெல்லி போலீசார் வழக்குப்பதிவு செய்து, குற்றம் சாட்டப்பட்ட ஓட்டுநர் மற்றும் நடத்துனரை கைது செய்துள்ளனர்.

மேலும் அந்த சொகுசுப் பேருந்தையும் போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டு, தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

டெல்லியில் ஓடும் பேருந்தில் மாணவி நிர்பயா பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பரபரப்பு ஏற்படுத்திய நிலையில், டெல்லியில் மீண்டும் அதே போன்று ஓடும் பேருந்தில் பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# "பழனிசாமி உள்ளிட்ட 22 எம்எல்ஏக்களை தகுதி நீக்கம் செய்ய மனு அளித்துள்ளோம்" C.விஜயபாஸ்கர்

சென்னை:மே 15-

"கொறடா உத்தரவை மீறி செயல்பட்ட எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட 22 எம்.எல்.ஏ.க்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என மனு அளித்துள்ளோம்" என்று அதிமுக எம்.எல்.ஏ சி.விஜயபாஸ்கர் கூறியுள்ளார். இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "பெரும்பான்மையான அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் எஸ்.பி.வேலுமணியை சட்டமன்ற குழு தலைவராகவும், சி.விஜயபாஸ்கர் ஆகிய என்னை சட்டமன்ற குழுவின் கொறடாவாகவும் நியமித்தார்கள். அதைத் தொடர்ந்து, நேற்று தவெக



அரசின் மீது நடைபெற்ற நம்பிக்கை கோரும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களுக்குமாறு சட்டமன்ற உறுப்பினர்களை அறிவுறுத்தியிருந்தோம். 7 சட்டமன்ற உறுப்பினர்களில் 25 பேர், கொறடா உத்தரவை ஏற்று நடந்தார்கள்.

இந்நிலையில், கொறடா உத்தரவை மீறி செயல்பட்ட இபிஎஸ் உள்ளிட்ட 22 சட்டமன்ற உறுப்பினர்களை கட்சி தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என சட்டப்பேரவைத் தலைவரிடம் மனு அளித்துள்ளோம். பெரும்பான்மையான உறுப்பினர்கள் எங்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ஊட்டியில் தொடங்கியது 21வது ரோஜா கண்காட்சி

# 70 ஆயிரம் ரோஜா மலர்களால் ஆன அன்னப்பறவை ஜோடி கவனம் ஈர்த்தது

ஊட்டி:மே,15-

ஊட்டி ரோஜா பூங்காவில் 21 வது ரோஜா கண்காட்சி தொடங்கியது. 70 ஆயிரம் ரோஜாக்களால் ஆன அன்னப்பறவை ஜோடி பார்வையாளர்களைக் கவர்ந்தது. நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் தொடங்கியுள்ளது. சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து வரும் நிலையில், ஆண்டுதோறும் நடைபெறும் கோடை விழாவின் முதல் நிகழ்ச்சியான 21 வது ரோஜா கண்காட்சி இன்று ஊட்டி ரோஜா பூங்காவில் தொடங்கியது .கண்காட்சியை நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தொடங்கி வைத்து, பூங்காவில் அமைக்கப்பட்ட மலர் அலங்காரங்களை பார்வையிட்டார். இந்த ஆண்டு கண்காட்சியின் சிறப்பம்சமாக, 'பறவைகளின் சொர்க்கம்' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு 2 லட்சம் ரோஜா மலர்களால் பல்வேறு பறவை இனங்களின் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 70,000 ரோஜாக்களால்



வடிவமைக்கப்பட்ட அன்னப் பறவை ஜோடி சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன. மேலும், கழுகு, இருவாச்சி பறவை, புல் புல், பேரடைஸ் ஃபிளை கேச்சர், தூக்கணாங்குருவி, தேன் சிட்டு, மலபார் இருவாச்சி, நீலகிரி லாஃபிங் திரஷ் உள்ளிட்ட மொத்தம் 14 வகையான பறவை வடிவங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

கூடுதலாக, 'ஆங்க்ரி பேர்ட்ஸ்' போன்ற கார்டூன் வடிவங்களும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. பூங்கா முழுவதும் 4,310 ரகங்களைச் சேர்ந்த 33,000 ரோஜா செடிகள் பல்லாயிரக்கணக்கான வண்ணங்களில் பூத்து குலுங்கி சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் வகையில் அமைந்துள்ளது.கண்காட்சி தொடங்கிய முதல் நாளிலேயே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து கண்டு ரசித்து வருகின்றனர். கடந்த ஆண்டு 3 நாட்கள் நடந்த ரோஜா கண்கா ட்சி, இந்த ஆண்டில் 5 நாட்கள் நடைபெறவுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் வருகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

# "சனாதனம் ஒழிக என்று உதயநிதி கூறியது சரி!" காங். எம்.பி. கிறிஸ்டோபர் திலக் வரவேற்பு

திருச்சி:மே,15-

சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக, தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான மனநிலையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி தனது உரையில் 'சனாதனம் ஒழிக' என்று கூறியுள்ளது வரவேற்கத்தக்கது என்று காங்கிரஸ் எம்.பி. எம்.கிறிஸ்டோபர் திலக் கூறினார். திருச்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளருமான எம். கிறிஸ்டோபர் திலக், திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், "தவெகவினர் குதிரை பேரத்தில் ஈடுபடவில்லை. திமுக அதிமுகவை மையப்படுத்தியே குதிரை பேரம் நடந்துள்ளதாக சி.வி. சண்முகத்தின் கருத்தில் இருந்து தெரிகிறது. அரசியலில் குழப்பமான சூழல் நிலவும்போது எம்எல்ஏக்கள் கட்சி மாறுவது நடக்கத்தான் செய்யும். தவெக அரசு, காங்கிரஸ் கட்சிக்கு இன்னும் ஒரு சில நாட்களில் அமைச்சரவையில் நிச்சயம்



இடம் வழங்கும். சில இழுபறிகள் இருக்கத்தான் செய்யும். அவை விரைவில் சரியாகும். காங்கிரஸ் கட்சிக்கு அமைச்சரவையில் ஒன்று அல்லது இரண்டு இடங்கள் வழங்குவார்கள் என்கிற நம்பிக்கை உள்ளது. இண்டியா கூட்டணி என்பது பாஜக எதிர்ப்பை மையப்படுத்தியதுதான். அந்த வகையில் பாஜகவை எதிர்க்கும் திமுக, இண்டியா கூட்டணியில்தான் உள்ளது.

தேர்தல் முடிந்த இந்த நேரத்தில் சில நெருடல்கள் இருக்கின்றன. வரும் காலத்தில் அவை சரியாகும். சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக, தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான மனநிலையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி தனது உரையில் 'சனாதனம் ஒழிக' என்று கூறியுள்ளது வரவேற்கத்தக்கது.


கேரளாவின் முதல்வர் வேட்பாளர் யார் என்ற அறிவிப்பு இன்று வெளியாகும். மாநில அரசை ஆதரிக்கும் கட்சிகள் அமைச்சரவையில் இடம் பெறாவிட்டாலும் கூட, அக்கட்சியினரை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அமைத்து, அதில் கலந்தாலோசனை செய்து, அதன் அடிப்படையில் தமிழக அரசை வழிநடத்த தவெக முன்வர வேண்டும்," என்றார்.

# 16 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் எஸ்ஐஆர் பணிகள் மே 30ல் தொடக்கம்

புதுடெல்லி:மே 15-

நாட்டில் 16 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) மேற்கொள்ளும் பணிகள் மே 30ம் தேதி தொடங்கும் என்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இது 3ம் கட்டமாக நடைபெறும் எஸ்ஐஆர் பணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, பிஹாரில் கடந்த ஆண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) நடைபெற்றது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்டமாக எஸ்ஐஆர் பணிகள் நடைபெற்றது. இப்போது 3ம் கட்டமாக 16 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.இருப்பினும்,




இந்த முறை இமாச்சல் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்கள் எஸ்ஐஆர் பணிகள் வரம்புக்குள் கொண்டுவரப்படவில்லை. அப்பகுதிகளில் தட்பவெப்ப சூழல் உள்ளிட்ட சில காரணங்களால் அங்கு பின்னர் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.94 பிஎல்ஓக்கள்: 3ம் கட்ட எஸ்ஐஆர் பணிகளில் 3.94 லட்சம் பிஎல்ஓக்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனத் தெரிகிறது. இது குறித்து தேர்தல் ஆணைய அதிகாரிகள் வட்டாரம் கூறும்போது "தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளில் வீடுகள் கணக்கெடுப்பு நடந்து வருகிறது. இந்தப் பணிகளுடனேயே எஸ்ஐஆர் பணிகளையும் இணைத்து களப் பணியாளர்களை திறம்பட பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது" என்றது.

இதற்காக 3.94 லட்சம் பூத் லெவல் ஆஃபீசர்ஸ் எனப்படும் பிஎல்ஓக்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் 36.73 கோடி வாக்காளர்களிடம் வீடு வீடாகச் சென்று ஆவணங்களை சரிபார்ப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 3ம் கட்ட எஸ்ஐஆர் பணிகளில், டெல்லியும் இடம்பெறுகிறது. டெல்லியில் இறுதிக்கட்ட வாக்காளர் பட்டியல் அக்டோபர் 7ம் தேதி வெளியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணைய வட்டாரத் தகவலின்படி, இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், லடாக்கில் மக்கள் தொகை 2ம் கட்ட கணக்கெடுப்புப் பணிகள் முடிந்த பின்னர் எஸ்ஐஆர் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3ம் கட்ட எஸ் ஐஆர் பணிகள் தொடக்கம் தொடர்பான அறிவிப்பு நிகழ்வில் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், "வாக்காளர்கள் அனைவரும் 3ம் கட்ட எஸ்ஐஆர் பணிகளில் தங்களை உற்சாகமாக இணைத்துக் கொண்டு தங்களை தகுதியான வாக்காளர் என்பதை உறுதி செய்ய உரிய கணக்கீட்டுப் படிவத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார். நாட்டில் முதல் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரையில் நடைபெற்றது. இதில் பிஹாரில் 47 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். மொத்த வாக்காளர்களில் இது 5 முதல் 6 சதவீதம். அதன் பின்னர் நடந்த பிஹார் தேர்தலில் ஆர்ஜேடி பாஜக கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

2ம் கட்ட எஸ்ஐஆர் பணிகள் அக்டோபர் 27, 2025ல் நடைபெற்றது. இதில் தமிழகம் உள்பட 9 மாநிலங்கள், புதுச்சேரி உள்பட 3 யூனியன் பிரதேசங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்சமாக 2.04 கோடி வாக்காளர்களும், அடுத்தபடியாக மேற்குவங்கத்தில் 83.86 லட்சம் வாக்காளர்களும் நீக்கப்பட்டனர். அதன் பின்னர் நடந்த 5 மாநில தேர்தலில் தமிழகம், கேரளம், மேற்கு வங்கத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அசாம், புதுச்சேரியில் பாஜக ஆட்சி தொடர்கிறது.

# முகூர்த்தம், வார இறுதி நாட்களை முன்னிட்டு சென்னையில் இருந்து 1,600 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சென்னை:மே 15-

முகூர்த்தம், வார இறுதி நாட்களை முன்னிட்டு சென்னையில் இருந்து 1,600 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என, போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மே 14ம் தேதி முகூர்த்த நாள், மே 15, 16, 17 வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்



களுக்கு இன்று (14ம் தேதி) 80 பேருந்துகளும், நாளை (15ம்தேதி) 620 பேருந்துகளும், 16ம் தேதி 655 பேருந்துகளும், சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை மற்றும் நாளை மறுநாள் 120 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்திலிருந்து நாளை மற்றும் நாளை மறுநாள் 25 பேருந்துகளும் மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.


இந்நிலையில், இந்த வார இறுதியில் இன்று 5,676 பயணிகளும், நாளை 10,853 பயணிகளும் சனிக்கிழமை அன்று 8,421 பயணிகளும் மற்றும் ஞாயிற்றுக்கிழமை அன்று 9,759 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுவதால் பயணிகள் வசதியாக பயணம் மேற்கொள்வார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்

## கொடைக்கானலில் போக்குவரத்து நெரிசல்

# சாலையில் அணிவகுக்கும் வாகனங்களால் பாதியிலேயே திரும்பும் சுற்றுலா பயணிகள்

பழநி:மே 15-

கொடைக்கானலில் கோடை சீசன் தொடங்கிய நிலையில், போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் விதமாக, 2024 மே 7ம் தேதி முதல் கொடைக்கானலுக்கு சுற்றுலா பயணிகள் செல்ல 'இபாஸ்' நடைமுறை அமலில் உள்ளது. இருந்தும், ஆண்டுதோறும் அனுபவிக்கும் சிரமங்கள் இந்த ஆண்டும் தொடர்வதாக சுற்றுலா பயணிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.கோடை சீசன் தொடங்கிய நிலையில் கொடைக்கானலில் விடுமுறை நாட்கள் மட்டுமின்றி, வார நாட்களிலும் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. இதனால் சுற்றுலாப் பயணிகள் அரைகுறையாக சுற்றுலா இடங்களை பார்த்து விட்டு பாதியிலேயே திரும்பும் நிலை உள்ளது.



கொடைக்கானல் நகராட்சி சார்பில் பேருந்து நிலையம் மற்றும் ரோஜா பூங்கா அருகில் தற்காலிக வாகன நிறுத்த இடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடம் போதுமானதாக இல்லாததால் சாலையோரம் வாகனங்களை நிறுத்தி செல்கின்றனர். இதுவும் போக்குவரத்து நெரிசலுக்கு முக்கியக் காரணம். இது தவிர, சுற்றுலா இடங்களில் போதுமான கழிப்பறைகள், குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை.

மேலும், சீசனை முன்னிட்டு திண்டுக்கல், தேனி மாவட்ட போலீஸாரை தற்காலிக பணியாக கொடைக்கானலுக்கு அனுப்பி வைத்து போக்குவரத்தை சீர் செய்ய மாவட்ட காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது

# அண்ணனை இரும்பு கம்பியால் அடித்து கொன்ற தம்பி கைது

## போதையில் வெறிச்செயல்

அறந்தாங்கி:மே,15-

போதையில் அண்ணனை இரும்பு கம்பியால் அடித்து கொன்ற தம்பி கைது செய்யப்பட்டார். புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அடுத்த கோட்டைப்பட்டினம் மீனவர் காலனியை சேர்ந்தவர் ரகுமான்கான்(45). இவரது தம்பி இதிரிஸ்(40). மீனவர்கள். இதிரிசுக்கு திருமணமாகவில்லை. குடும்ப பிரச்னை காரணமாக ரகுமான்கானை விட்டு அவரது மனைவி பிரிந்து சென்று விட்டார்.

சகோதரர்கள் இருவரும் கோட்டைப்பட்டினம் மீனவர் காலனி வீட்டில் ஒன்றாக வசித்தனர். இருவருக்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளது. அடிக்கடி மது அருந்தி விட்டு வீட்டில் இருவரும் சண்டை போட்டு கொள்வார்களாம். நேற்று முன்தினம் இரவும் வழக்கம்போல் இரண்டு பேரும் அதிகமாக மது அருந்தி விட்டு போதையில் சண்டையிட்டுள்ளனர்.அப்போது இதிரிஸ் அருகில் கிடந்த இரும்பு கம்பியை எடுத்து ரகுமான்கான் தலையில் சரமாரியாக தாக்கினார். இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்த ரகுமான்கான் அந்த இடத்திலேயே இறந்தார். தகவலறிந்து வந்த போலீசார் விசாரணை நடத்தினர். பின்னர் ரகுமான்கான் உடலை பிரேத பரிசோதனைக்கு மணமேல்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்கு பதிவு செய்து இதிரிசை நேற்று கைது செய்தனர். பின்னர் அவரை புதுக்கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அங்குள்ள சிறையில் அடைத்தனர்



■ சாத்தான்குளம் நெடுஞ்சாலைத்துறைக்குடப்பட்ட அனைத்து சாலை களின் இருபுறமும் வளர்ந்துள்ள முட்செடிகளை அகற்றி பொது மக்களுக்கு பாதுகாப்பான சாலை போக்குவரத்தினை வழங்க வேண்டும் என்று, நாம் தமிழர் கட்சி சார்பில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் பாசறை செயலாளர் தட்டார்மடம் சகாய சீலன் தலைமையில், சாத்தான்குளம் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் கோமதி சங்கரியிடம் கோரிக்கை மனுவினை அளித்தனர். நிகழ்வில் ஒன்றிய குருதி கொடை பாசறை செயலாளர் விக்னேஷ் , துணை செயலாளர் வினோத் , IT wing துணை செயலாளர் பிரைட் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.




# கேரளாவில் பெட்ரோல், டீசல் விற்பனைக்கு புதிய கட்டுப்பாடுகள் அறிவிப்பு

கேரளா:மே,15-

கேரளாவில் பெட்ரோல், டீசல் விற்பனைக்கு விற்பனைக்கு புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு அதிகபட்சமாக 5000 ரூபாய்க்கு பெட்ரோலும், 200 லிட்டர் டீசல் மட்டுமே விற்பனை செய்யப்படும். கையிருப்பு நிலைக்கு ஏற்ப இந்த விற்பனை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்துள்ளது

## ஆன்லைன் மருந்து விற்பனைக்கு எதிர்ப்பு: மே 20ல் நாடு தழுவிய வேலை நிறுத்தம்



புதுடெல்லி: மே 15- ஆன்லைன் மருந்து விற்பனையைத் தடை செய்ய கோரி, மே 20ம் தேதி நாடு தழுவிய அளவில் மருந்தகங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றன. சுமார் 12.4 லட்சம் மருந்தகங்கள் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட கூடும் என்பதால் நாடு முழுவதும் மருந்து விநியோகம் பாதிக்கப்படும் என தெரிகிறது. இது தொடர்பாக அகில இந்திய மருந்தக உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாவது: முறைப்படுத்தப்படாத ஆன்லைன் மருந்து விற்பனையால் நோயாளிகளின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. முறையான சரிபார்ப்பு இன்றி மருந்துகள் விநியோகிக்கப்படுவதால், ஒரே மருந்துச் சீட்டைப் பலமுறை பயன்படுத்தும் அவல நிலை காணப்படுகிறது. ஆன்டிபயாடிக், போதை தரக்கூடிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதற்கு வழிவகுக்கிறது. செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட போலி மருந்துச் சீட்டுகளைப் பயன்படுத்தி மருந்துகள் விற்பனை செய்யப்படுவதால், மருந்து எதிர்ப்புத்திறன் (ஏஎம்ஆர்) அதிகரிக்கும் அபாயம் உள்ளது. மேலும், கரோனா காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தற்காலிகத் தளர்வுகளைப் பயன்படுத்தி, ஆன்லைன் நிறுவனங்கள் மருந்து விதிகளை மீறி வருகின்றன. எனவே, மின் மருந்தகச் செயல்பாடுகள் தொடர்பான அரசாணைகளை மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். மருந்தகங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. இந்தத் தொழிலை நம்பியுள்ள சுமார் 5 கோடி மக்களின் வாழ்வாதாரமும் இதனால் பாதிக்கப்படும். மே 20ம் தேதிக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், போராட்டம் தீவிரப்படுத்தப்படும். மே 20 அன்று வேலைநிறுத்தம் நடைபெற்றாலும், அவசர கால மருந்துகள் தடையின்றி கிடைக்கப் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஏஐஓசிடி தெரிவித்துள்ளது

## ரூ.10 பிரச்சினை: கூடுதல் விலைக்கு மது விற்போருக்கு டாஸ்மாக் நிர்வாகம் எச்சரிக்கை




சென்னை:மே 15- தமிழகம் முழுவதும் உள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் கூடுதல் விலைக்கு மது விற்பவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என டாஸ்மாக் நிர்வாகம் எச்சரித்துள்ளது. இது குறித்து டாஸ்மாக் மேலாண் இயக்குநர் வெளியிட்ட சுற்றறிக்கையில், 'தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில், நிர்ணயித்த விலையைவிட கூடுதல் விலை வைத்து விற்பனை செய்வதாக புகார்கள் தலைமை அலுவலகத்துக்கு வந்தவண்ணம் உள்ளன. எனவே, கூடுதல் விலைக்கு மது விற்கும் கடை பணியாளர்கள் மீது மிகக் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதை தடுக்கத் தவறும் மாவட்ட மேலாளர்கள் மீதும் உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது. அனைத்து மண்டலத்திலுள்ள பறக்கும் படை துணை ஆட்சியர்கள் தத்தம் மண்டலத்தில் தெரிய வரும் புகார்கள் குறித்தான மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை ஆய்வு செய்து, தவறு செய்யும் கடை பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மது விற்கக் கூடாது என ஏற்கெனவே சட்டம் இருக்கும் நிலையில், அதைக் கடைபிடிக்க தற்போது மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மதுபானம் வாங்க வருவோரின் வயது குறித்து சந்தேகம் இருந்தால் அடையாள அட்டைகளை கொண்டு சரிபார்க்க வேண்டும் என்றும், மீறுவோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் தற்போது 4,765 மதுக்கடைகள் இயங்கி வரும் நிலையில் கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிலையங்கள் அருகில் இருக்கும் 717 மதுக்கடைகளை 2 வாரங்களில் மூட முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து அந்த கடைகள் படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன. டாஸ்மாக் கடைகளில் மதுப்பாட்டில்களுக்கு கூடுதலாக ரூ.10 வசூலிக்கப்படுவது இதுவரை பெரும் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டது. தற்போது புதிய ஆட்சி அமைந்த பிறகும் இந்த நடைமுறை தொடர்கிறது என மது பிரியர்கள் குற்றம்சாட்டுகின்றனர். ஒரு சில இடங்களில் ஏன் கூடுதல் தொகை கேட்கிறீர்கள் என்ற வாக்குவாதம் செய்யும் வீடியோக்கள் பரவி வருவகின்றன. இந்தச் சூழலில்தான் டாஸ்மாக் மேலாண் இயக்குநர் வெளியிட்ட சுற்றறிக்கை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## டிசிஎஸ் வழக்கில் தொடர்புடைய நிடா கானுக்கு தஞ்சமளித்தவரின் சட்டவிரோத கட்டிடம் இடிப்பு



சத்ரபதி சம்பாஜி நகர்:மே 15- மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள டிசிஎஸ் நிறுவனத்தில் பணியாற்றிய பெண் ஊழியர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் மத மாற்றம் செய்ய முயன்றதாகவும் புகார் எழுந்தது. இந்த விவகாரத்தில் அதன் ஊழியர் நிடா கானுக்கு முக்கிய பங்கு இருப்பது விசாரணையில் தெரிய வந்தது. தலைமறைவாக இருந்த நிடா கான் கடந்த மே 7ம் தேதி சத்ரபதி சம்பாஜி நகரில் (அவுரங்காபாத்) கைது செய்யப்பட்டார். அவருக்கு ஏஐஎம்ஐஎம் கட்சியைச் சேர்ந்தவரும் சத்ரபதி சம்பாஜி நகர் மாமன்ற உறுப்பினருமான மதின் படேல் அடைக்கலம் கொடுத்தது விசாரணையில் தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து, சத்ரபதி சம்பாஜி நகரின் நரேகான் பகுதியில் சட்ட விரோதமாக படேல் கட்டியிருந்த கட்டடத்தை நேற்று காலை மாநகராட்சி ஊழியர்கள் இடித்துத் தள்ளினர். இது குறித்து ஏஐஎம்ஐஎம் முன்னாள் எம்.பி.இம்தியாஸ் ஜலீல் கூறும்போது, "நாங்கள் நீதிமன்றத்தில் ஒரு வாரம் அவகாசம் கேட்டோம், ஆனால் மாநகராட்சி இடிப்பதில் அவசரம் காட்டுகிறது. எனினும், படேலுக்கு நாடு வியக்கும் வகையில் ஒரு வீட்டை நாங்கள் கட்டித் தருவோம்" என்றார்.

## மணிப்பூர் மாநிலத்தில் 3 சர்ச் தலைவர்கள் சுட்டுக்கொலை



இம்பால்:மே 15- மணிப்பூரில் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், 3 சர்ச் தலைவர்கள் உயிரிழந்தனர். உடனடியாக தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டு மர்ம நபர்களை பாதுகாப்புப் படையினர் தேடி வருகின்றனர். மணிப்பூர் மாநிலம் காங்போக்பி மாவட்டத்தைச் சேர்ந்த சர்ச் பாதிரியார்கள், சுராசந்த்பூர் மாவட்டம் லம்கா பகுதியில் 'தடோவ் பேப்டிஸ்ட் அசோசியேஷன்' ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பின்னர் 2 வாகனங்களில் பாதிரியார்கள் மீண்டும் காங்போக்பிக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் 2 வாகனங்களையும் வழிமறித்து சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 3 சர்ச் தலைவர்கள் உயிரிழந்தனர். மேலும், பலர் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலருடைய உடல்நிலைக் கவலைக்கிடமாக உள்ளது. இந்தச் சம்பவம் குறித்து அறிந்ததும் பாதுகாப்புப் படையினர், தேசிய நெடுஞ்சாலை2ஐ முடி தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். இந்த நெடுஞ்சாலைதான் மணிப்பூரையும் நாகாலாந்தையும் இணைக்கும் சாலையாகும். அத்துடன் நாட்டின் மற்ற பகுதிகளையும் இந்த தேசிய நெடுஞ்சாலைதான் இணைக்கிறது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தடோவ் சங்கத் தலைவரும் பாஜக செய்தித் தொடர்பாளருமான மைக்கேல் லாம்ஜாதாங் தடோவ் கூறும்போது, "தடோவ் சமூகத்தினர் தனிப் பிரிவினர். குகி பழங்குடியினத்தவர்களுக்கும் தடோவ் சமூகத் தினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த நிலையில், தடோவ் சர்ச் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது பெரும் வேதனை அளிக்கிறது. மணிப்பூரில் நடைபெற்று வரும் வன்முறையில், தடோவ் சமூகத்தினரையும் குகி என்று தவறுதலாகப் புரிந்து கொண்டு தாக்குதல் நடத்துகின்றனர். இதனால் எங்கள் சமூகத்தினர் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்" என்றார்.

## சுகாதாரத் துறை செயலராக தாரேஸ் அகமது நியமனம்



சென்னை:மே 15- சுகாதாரத்துறை செயலராக தாரேஸ் அகமது நியமனம் உட்பட 5 ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து தலைமைச் செயலர் எஸ்.சாய்குமார் வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு தொழில் வழிகாட்டு நிறுவன மேலாண் இயக்குனர் தாரேஸ் அகமது, சுகாதாரத் துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக முதல்வர் செயலர் நிலை 3 ஆக இருந்த அனுஜார்ஜ், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம், மீனவர் நலத் துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். தொழில், தொழில் மேம்பாடு மற்றும் வணிகத் துறை சிறப்பு செயலர் மரியம் பல்லவி பல்தேவ், சமூக நலத் துறை செயலராகவும், நிதித் துறை முன்னாள் செயலர் த.உதயச்சந்திரன், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்) தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகவும், அப்பதவியில் இருந்த குமார் ஜயந்த், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அரசு சட்டக் கல்லூரிகளில் 5 ஆண்டு கால சட்டப் படிப்புக்கு விண்ணப்பம்: சட்டப் பல்கலைக்கழகம் அறிவிப்பு




சென்னை:மே 15- அரசு சட்டக் கல்லூரிகளில் ஒருங்கிணைந்த 5 ஆண்டு கால சட்டப் படிப்புகளில் சேர மே 18 முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என சட்டப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கவுரி ரமேஷ் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: 202627ம் கல்வி ஆண்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டக் கல்லூரியிலும், பல்கலைக்கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற்றுள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும், மற்றும் தனியார் சட்டக் கல்லூரிகளில் (அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மட்டும்) வழங்கப்படும் 5 ஆண்டு கால ஒருங்கிணைந்த சட்டப் படிப்புகளில் சேர மே 18 முதல் ஜூன் 5 வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இதற்கான இணையதள முகவரி: www.tndalu.ac.in ஆகும். மேலும் 3 ஆண்டு சட்டப் படிப்பு மற்றும் முதுகலை சட்ட மேற்படிப்புகளுக்கான விண்ணப்பிக்கும் தேதிகள் தொடர்பான விவரங்கள் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவு பால் உற்பத்தி சங்க கண்காணிப்பு டிஜிபியாக டேவிட்சன் தேவாசீர்வாதம் நியமனம்



சென்னை:மே 15- காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் இப்போது தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி சங்க கண்காணிப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றதில் இருந்து ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் மாற்றம் நடந்து வருகிறது. அந்த வகையில் இன்றும் சில அதிகாரிகள் மாற்றம் நிகழ்ந்துள்ளது. அந்த வகையில், காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் இப்போது கூட்டுறவு பால் உற்பத்தி சங்க கண்காணிப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் திமுக ஆட்சியில் லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியாகவும், உளவுத் துறை கூடுதல் டிஜிபியாகவும் இருந்தவராவார். அதேவேளையில், பால் உற்பத்தி ஊழல் கண்காணிப்பு அதிகாரியாக இருந்த ராஜீவ் குமார் ஐபிஎஸ் இப்போது ஊனமாஞ்சேரி காவல் பயிற்சி பள்ளி டிஜிபியாக மாற்றப்பட்டுள்ளார். உளவுத் துறை ஐஜியாக இருந்த செந்தில்வேலன் ஐபிஎஸ் இப்போது தமிழ்நாடு போலீஸ் அகாடமியின் ஐஜியாக மாற்றப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை உள்துறை செயலர் கே.மணிவாசன் பிறப்பித்தார்.

## எஸ்ஐஆர் மூலம் நீக்கப்பட்டவர்கள் அரசு நலத் திட்டங்களை பெற முடியாது: மேற்கு வங்கம், பிஹார் மாநில அரசுகள் அறிவிப்பு



கொல்கத்தா/பாட்னா:மே,15- மேற்கு வங்கத்தில் முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையில் புதிய பாஜக அரசு கடந்த சனிக்கிழமை பதவியேற்றது. இந்த அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் கடந்த திங்கள் கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் முதல்வர் சுவேந்து அதிகாரி கூறுகையில், "அரசின் அனைத்து சமூக நலத்திட்டங்களும் அவை 10 ஆண்டுக்கு முன் அல்லது 30 ஆண்டுக்கு முன் தொடங்கப்பட்டவையாக இருந்தாலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். எனினும், இறந்தவர்கள், சட்டவிரோதமாக ஊடுருவியவர்கள் அல்லது இந்தியர் அல்லாத எவரும் மேற்கு வங்க மக்களுக்கான நலத் திட்டங்களை பெற அனுமதிக்கப்படமாட்டார்கள்" என்றார். இந்நிலையில் எஸ்ஐஆர் நடவடிக்கையின் கீழ் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை பெற முடியாது என்று மேற்கு வங்க அரசு அறிவித்துள்ளது. எனினும் எஸ்ஐஆர் நடவடிக்கையில் பெயர் நீக்கப்பட்டதற்கு எதிராக தீர்ப்பாயத்தில் முறையீடு செய்தவர்களுக்கு அதில் இறுதி முடிவு எடுக்கப்படும் வரை நலத்திட்ட உதவி தொடரும். அதன் பின் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. மேற்கு வங்க உணவு வழங்கல் துறை அமைச்சர் அசோக் கீர்த்தனியா கூறுகையில் "குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளவர்கள் அனைத்து அரசு திட்டங்களையும் பெறலாம். ரேஷன் அட்டைகள் சரிபார்க்கப்படும்" என்றார். இதுபோல் பிஹார் தலைநகர் பாட்னாவில், முதல்வர் சாம்ராட் சவுத்ரி கூறுகையில் "பிஹாரில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள், ரேஷன் பொருட்கள், பிற நலத்திட்டங்கள் உட்பட எந்தவொரு அரசு சலுகையையும் பெற முடியாது. இவர்களின் வங்கி பாஸ் புத்தகங்களும் உரிய காலத்தில் ரத்து செய்யப்படும்" என்றார். பிஹார் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அசோக் சவுத்ரி கூறுகையில், "மாநிலத்தில் எஸ்ஐஆர் நடவடிக்கைக்கு பிறகு, ரேஷன் அட்டைதாரர்களில் இருந்து சுமார் 5 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர்" என்றார்.

## கரூர் அருகே ராட்சத குழாய் உடைந்து வீணாக வெளியேறிய குடிநீர்

கரூர்:மே 15- கரூர் மாவட்டம் வெள்ளியணை அருகே காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் அமைக்கப்பட்ட ராட்சத குழாய் உடைந்து குடிநீர் வீணானது. கரூர் மாவட்டம் வெள்ளியணை கடை வீதியில் ஆஞ்சநேயர் கோயில் பேருந்து நிறுத்தம் பகுதியில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு செல்லும் காவிரி கூட்டு குடிநீர் திட்ட ராட்சத குழாயில் இன்று (மே 14) காலை 6 மணி அளவில் உடைப்பு ஏற்பட்டது. குடிநீர் வெளியேறி சாலையின் ஒரு பகுதியில் குளம் போல தேங்கியதால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



இதனால் சாலையின் எதிர்புறம் வழியாக வாகனங்கள் இயக்கப்பட்டன. சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக லட்சக்கணக்கான லிட்டர் குடி தண்ணீர் வெளியேறி வீணான நிலையில் அப்பகுதியில் உள்ளவர்கள் குடிநீர் உந்து (பம்ப்பிங்) நிலையத்திற்கு தகவல் அளித்து தண்ணீர் நிறுத்தப்பட்டது. இப்பகுதியில் அடிக்கடி குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி வருவதால் முறையாக தரமான முறையில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## ஐபிஎஸ் அதிகாரிகள் மாற்றம்: சைபர் க்ரைம் டிஜிபியாக பால நாகதேவி நியமனம்



சென்னை:மே 15- சைபர் க்ரைம் பிரிவு டிஜிபியாக பால நாகதேவி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், சில ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலர் கே.மணிவாசன் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதன்படி, உளவுப் பிரிவு டிஜிபியாக உள்ள பால நாகதேவி தற்போது சைபர் க்ரைம் பிரிவு டிஜிபியாக நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரக் குற்றப் பிரிவு டிஜிபியாக இருந்த பால நாகதேவி, கடந்த மார்ச் மாதம் உளவுப் பிரிவு டிஜிபியாக நியமிக்கப்பட்டார். உள்துறைச் செயலராக இருந்த தீரஜ்குமார் இதற்கான அறிவிப்பை வெளியிட்டிருந்தார். இரண்டு மாதங்களில் பால நாகதேவியின் பொறுப்பு தற்போது மாற்றப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. முதல்வர் விஜய்யின் பாதுகாப்பு பிரிவு டிஐஜியாக ஜி.தர்மராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்பு வேலூர் சரக டிஐஜியாக பணியாற்றினார். தென் சென்னை இணை ஆணையாளராக இருந்த பி.சி.கல்யாண் இப்போது சென்னை உளவுப் பிரிவு (இன்டர்னல் செக்யூரிட்டி) டிஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார். திருநெல்வேலி சரக டிஐஜியாக இருந்த பி.சரவணன் இப்போது சென்னை சிஐடி உளவுத் துறை டிஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார். திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த ஜி.கே.உத்தரவால் இப்போது சென்னை குற்றப் பிரிவு உளவுத் துறையின் எஸ்பியாக நியமிக்கப்பட்டுள்ளார். தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருக்கும் மயில்வாகனன் இப்போது சென்னை சிஐடி சிறப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த மதன் இப்போது சென்னை சிறப்புப் பிரிவு சிஐடி கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். க்யூ பிராஞ்ச் கண்காணிப்பாளராக இருந்த கே.சண்முகம் இப்போது சிஐடி சிறிப்புப் பிரிவு கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை குற்றப் பிரிவு சிஐடி கண்காணிப்பாளராக இருக்கும் மாதவன் இப்போது பாதுகாப்புப் பிரிவு சிஐடி கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை சட்டம் ஒழுங்கு உதவி ஐஜியாக இருந்த சிலம்பரசன் இப்போது சிறப்புப் பிரிவு சிஐடி கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஈச்சந்தாவில் அருள் பாலிக்கும் அன்னை ஸ்ரீ தம்புராட்டி அம்மன் அன்னை ஸ்ரீ வடகாசி அம்மன் சித்திரை கொடை விழா

தென்காசி,மே 15-
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகா ஈச்சந்தா கிராமத்தில் இந்து சைவ பிள்ளைவாழ் சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியபட்ட அன்னை ஸ்ரீ தம்பிராட்டி அன்னை ஸ்ரீ வடகாசி அருள்பாலித்து பல தலைமுறைகளாக கொடை விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த வருடமும் அன்னை ஸ்ரீ தம்பிராட்டி அன்னை ஸ்ரீ வடகாசி திருக்கோவிலில் சித்திரை கொடைவிழா* 12/05/2026 தொடங்கி 14/05/2026 முடிய வெகு விமர்ச்சையாக நடைபெற்றது.



இத்திருவிழாவில் பக்தர்கள் விரதம் இருந்து பால்குடம் எடுத்து ஊர்வலமாக மேள தாளங்கள் முழங்க அம்மனின் திருக்கோவிலில் சித்திரை திருவிழா அபிஷேகம் அலங்காரம் மற்றும் சிறப்பு தீபாராதனை ஏராளமான பக்தர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற்று மகிழ்ச்சியாக கொண்டாடினார்கள்.

## “ஜான்சன் அடிகளார் தலைமையில் வள்ளியூர் பாத்திமா அன்னை விழா: பல்லாயிரம் பக்தர்கள் பங்கேற்பு!

வள்ளியூர், மே 15-
வள்ளியூர் தூய பாத்திமா அன்னை திருத்தல ஆண்டுத் திருவிழா, பங்குத் தந்தை ஜான்சன் அடிகளார் தலைமையில் கடந்த 10 நாட்களாகச் சிறப்பாக நடைபெற்றது.*கொடியேற்றம் - ஆரம்பம்:*கடந்த 4ம் தேதி கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. ஜெபநாதன் அடிகளார் கொடியேற்ற, கிறிஸ்டியான் தலைமையில் ஜெரால்டு ரவி மறையுரையாற்றினார்; சத்தியநேசன் அடிகளார் முன்னிலை வகித்தார். தொடர்ந்து வந்த நாட்களில் லூயிஸ் அடிகளார், சூசை அந்தோணி, போஸ்கோ, ஜஸ்டின் (எம்.எம்.ஐ) ஆகியோர் வழிபாடுகளை



நடத்தினர்.*சப்பர பவனி - ஆராதனை:*9ம் நாளன்று சூசை மணி தலைமையில் திருப்பலியும், அன்னையின் அலங்கார சப்பர பவனியும் நடைபெற்றது. இதில் நெல்சன் பால்ராஜ், மரிய அந்தோணி, இருதய ராஜா ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.*நிறைவு விழா - புது நன்மை:*10ம் நாள் கூட்டுத் திருப்பலியில் கிராசியுஸ் தலைமை வகிக்க, பிரான்சிஸ் மறையுரையாற்றினார். மாலையில் சத்யநேசன் அடிகளார் தலைமையில் சர்ச்சில், தோமாஸ் முன்னிலையில் கொடியிறக்கம் நடைபெற்றது. விழாவை முன்னிட்டு புது நன்மை வழங்கும் நிகழ்வும், மறைக்கல்வி ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.*சிறப்பித்த குழுக்கள்:* உதவி பங்குத்தந்தை வினோத் அடிகளார் மற்றும் திரு இருதய சபை, வின்சென்ட் தேபவுல் சபை, லூக்கா, அருளானந்தர், மத்தேயு, மாற்கு, யோவான் மண்டலங்கள், மறைக்கல்வி குழந்தைகள், பாலர் சபை, பீட சம்மனசுகள், நற்கருணை வீரர் சபை, ஆசிரியர்கள், பாடகர் குழு, அமலோற்ப மாதா சபை, திருக்குடும்ப சபை, மரியாவின் சேனை, செபக்குழு, பங்கு பேரவை மற்றும் அருட்சகோதரிகள் என அனைத்துக் குழுவினரும் இணைந்து சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.




■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன் தலைமையில் வருகின்ற தென்மேற்கு பருவமழை காலத்தில் எடுக்கப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

## காபி பார் தொடங்க கட்டிட அனுமதிக்கு கைநீட்டிய அதிகாரிகள் பிடிபட்ட பி.டி.ஓ மற்றும் இன்ஜினியர்

சேலம், மே 15-
சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், கட்டிட அனுமதி வழங்க லஞ்சம் வாங்கிய இரு அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.*லஞ்ச பேரம்:*தாழையூரைச் சேர்ந்த செந்தில்குமார் மணிமேகலை தம்பதியினர் காபி பார் தொடங்க அனுமதி கோரியிருந்தனர். இதற்கு அனுமதி வழங்க துணை



வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்திக் ரூ.20,000 லஞ்சம் கேட்டு, பின் ரூ.13,000க்கு பேரம் பேசினார்.*போலீஸ் அதிரடி:*புகாரின் பேரில், இன்ஸ்பெக்டர் ரவிக்குமார் தலைமையிலான லஞ்ச ஒழிப்புப் போலீசார் ரசாயனப் பொடி தடவிய ரூ.13,000த்தை செந்தில்குமாரிடம் கொடுத்து அனுப்பினர். இப்பணத்தை வாங்கிய கார்த்திக் மற்றும் இன்ஜினியர் தீபக் ஆகியோரை மறைந்திருந்த போலீசார் கையும் களவுமாகப் பிடித்துக் கைது செய்தனர்.




## மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து சேவை நிறுத்தம்? தமிழக அரசு விளக்கம்

சென்னை: மே 15-
தமிழக அரசுப் பேருந்துகளில் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து சேவை நிறுத்தப்பட்டதாகச் சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்திகள், வதந்திகள் என்று தமிழ்நாடு அரசு அதிகாரப்பூர்வமாக விளக்கம் அளித்துள்ளது. கடந்த திமுக அரசின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மகளிர் விடியல் பயணத்திட்டதின் அரசு மாநகர பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணித்து வந்தனர்

ஆனாலும் தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து சேவை நிறுத்தப்பட்டதாக சமூக வலைதளங்களில் செய்தி பரவி வருகிறது. பேருந்து பயணத் திட்டத்தை நிறுத்துவது தொடர்பாகத் தமிழ்நாடு அரசு தரப்பில் இருந்து எந்தவொரு அரசாணையோ அல்லது அதிகாரப்பூர்வ அறிவிப்போ வெளியிடப்படவில்லை என தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது





## திருப்பூரில் கலை இலக்கிய பெருமன்றம் கூட்டம்: கல்வி மற்றும் சமூகப் பணிகள் குறித்து முக்கியத் தீர்மானம்

திருப்பூர், மே 15-
திருப்பூர் வடக்கு மாநகர கலை இலக்கிய பெருமன்ற நிர்வாகிகள் கூட்டம், பி.என். ரோடு ஏ.ஐ.டி.யு.சி (AITUC) அலுவலகத்தில் துருவன் பாலா தலைமையில் நடைபெற்றது.*உறுப்பினர் சேர்க்கை:*கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் கள நிலவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், அமைப்பைப் பலப்படுத்தும் விதமாக, இம்மாத இறுதிக்குள் புதிய உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடிக்க ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.*மாணவர் பாராட்டு விழா:*எதிர்காலத் திட்டமாக, திருப்பூர் மாநகர அளவில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் 3 இடங்களைப் பிடித்த அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு, ஜூன் 14ஆம் தேதி பிரம்மாண்ட பாராட்டு விழா நடத்திப் பரிசளிக்க முடிவெடுக்கப்பட்டது.*பங்கேற்பாளர்கள்:* இக்கூட்டத்தில் தலைவர் த. சசிகலா, செயலாளர் அ. பழனி, மேரி நிர்மலா, மேரி ரோஸ்லின், சி. ராமகிருஷ்ணன், தளபதி விஜயராஜா மற்றும் ஆசிரியர்கள் என். அய்யாவு, மு. ராஜா, பி.சி. ராஜேந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

■ சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட செட்டிச்சாவடியில் திடக்கழிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உயிரி இயற்கை எரிவாயு தயாரிக்கும் மையம் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன்

## குதிரை பேரம் நடத்த தவெகவுக்கு அவசியம் இல்லை: அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்

சென்னை: மே 15-
குதிரை பேரம் நடத்த வேண்டிய அவசியம் தவெகவுக்கு இல்லை. அதற்கான தேவையும் எழவில்லை என்று அமைச்சர் சிடிஆர். நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: முதல்வர் விஜய் தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்று ஆதரவு தெரிவித்து 144 எம்எல்ஏக்கள் வாக்களித்துள்ளனர்.



எந்த நோக்கத்துக்காக மக்கள் விஜய்யை முதல்வர் ஆக்கினார்களோ, அந்த எண்ணம் நூறு சதவீதம் நிறைவேற்றப்படும். சட்டப்பேரவை தற்போது புதுப்பொலிவு பெற்றுள்ளது. இந்த ஆட்சியில், அனைத்து மக்கள் நலத் திட்டங்களும் தொய்வின்றித் தொடரும்.

மற்ற கட்சித் தலைவர்களை சந்தித்தது போலத்தான் அதிமுக நிர்வாகிகளையும் விஜய் சந்தித்தார். இதில் குதிரை பேரம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான தேவையும் இல்லை.

நீட் தேர்வில் கடந்த 5, 6 ஆண்டுகளாகவே தொடர்ந்து குளறுபடிகள் நடக்கின்றன. இதனால் லட்சக்கணக்கான மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நடத்தப்பட்டாலும், நீட் தேர்வு தேவையில்லை என்பதுதான் எங்கள் கட்சியின் உறுதியான நிலைப்பாடு. ஒரு சாதாரண தேர்வைக் கூட மத்திய அரசால் சரியாக நடத்த முடியவில்லை.தேர்வர்களை கடும் சோதனைக்கு உட்படுத்தும் மத்திய அரசு, வினாத்தாள் கசிவை தடுக்க இயலாத நிலையில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



■ திசையன்விளை தமிழக வெற்றி கழகம் மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த இளைஞர்களுடன், சிவானந்த பாண்டியன் மற்றும் சிவாலகுநாத் பாண்டியன் ஆகியோர் தலைமையில், இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை உருவாக்கிய மாவட்டச் செயலாளர் ராஜகோபால் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்த போது. உடன் மாவட்ட இணை செயலாளர் உவரி எஸ்டிவி.பிரசாத் மற்றும் டிஜிட்டல் சுபாஷ்.



■ திருப்பூர் மாநகராட்சி, மணியக்காரம்பாளையம் பகுதியில் அமிரூத் 2.0 திட்டத்தின் கீழ் புதிய கழிவுநீர் நீரேற்று நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் நடைபெறும் இடத்திற்கு மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணீஷ் நாரணவரே நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் இ.ஆ.ப., துணை ஆணையர்சுந்தரராஜன், மற்றும் தலைமைப் பொறியாளர் முகமது சபியுல்லா ஆகியோர் உடனிருந்தனர். பணிகளின் தற்போதைய முன்னேற்றம் குறித்து ஆட்சியர் விரிவாகக் கேட்டறிந்தார்.

## பொதுமக்களுக்கு தகவல் கொடுக்காமல் மின்சாரத்தை துண்டிக்கக் கூடாது: அமைச்சர் ஆதவ் அர்ஜுனா

சென்னை:மே 15-
சென்னையில் அறிவிக்கப்படாத மின்வெட்டு உள்ளது; பொதுமக்களுக்கு தகவல் கொடுக்காமல் மின்சாரத்தை துண்டிக்கக் கூடாது என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேட்டி அளித்துள்ளார். காவல் நிலையத்தில் புகாரளிக்க வருவோரும், புகாரைப் பெறும் அதிகாரிகளும் வீடியோ



பதிவு செய்ய வேண்டும். வில்லிவாக்கத்தில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி, அரசுப் பள்ளி திறக்க 10 நாளில் நிலம் கண்டறிய கேட்டுள்ளோம்



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் இ.ஆ.ப.மண்டலம்1, வார்டு13 க்கு உட்பட்ட ஃபயர் சர்வீஸ் காலனி பகுதி வணிக வளாகத்திற்கு முறையாக வரி விதிப்பு செய்வது குறித்து அவர் விரிவான ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது மண்டலம்1 உதவி ஆணையாளர் கணேஷ்குமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலரும் உடனிருந்தனர். வரியைக் கணக்கிடுதல் மற்றும் வசூலிப்பதில் உள்ள நடைமுறைகள் குறித்து ஆணையாளர் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000